

சென்னை முகாம் அலுவலகத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (01.06.2023) தமிழ்நாடு மின் நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் சார்பாக தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு ரூ.2 கோடிக்கான காசோலையை தமிழ்நாடு மின் நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத் தலைவர் ஆர்.அம்பலவாணன், ஐ.ஏ.எஸ். வழங்கினார்கள். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உள்ளனர்.

## எதிர்க்கட்சிகளை அச்சுறுத்தி வருகிறது பா.ஜ.க.

# மோடி ஆட்சியில் இந்தியாவில் ஜனநாயகம் இல்லை!

### அமெரிக்க நிகழ்ச்சியில் ராகுல்காந்தி பேச்சு!



கலிபோர்னியா, ஜுன் 3-

காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி அமெரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். சாண்டா குரூஸில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் சிலிக்கான் வேலி வளாகத்தில் நடந்த கேள்வி பதில் நிகழ்ச்சியில் அவர் பங்கேற்றார். அப்போது அவர் கூறியதாவது:-

ஒரு அரசியல்வாதியாக, பா.ஜ.வில் உள்ள பாதிப்புகளை என்னால் தெளிவாக பார்க்க முடிகிறது. எதிர்க்கட்சிகள் சரியாக இணைந்தால் பா.ஜ.வை தோற்கடிக்க முடியும். கர்நாடகா தேர்தலைப் பார்த்தால், காங்கிரஸ் கட்சி பாஜவை எதிர்த்துப் போராடி வீழ்த்தியது என்பது தான் பொதுவான உணர்வு. ஆனால் நாங்கள் பயன்படுத்திய திட்டங்கள் பற்றி சரியாக புரிந்து கொள்ளப்படவில்லை. கர்நாடகா தேர்தலில் நாங்கள் முற்றிலும் மாறுபட்ட அணுகுமுறையை பயன்படுத்தினோம். இதற்கான யோசனைகள் இந்திய ஒற்றுமை யாத்திரையில் இருந்து கிடைத்தன. கர்நாடக தேர்தலில் காங்கிரஸ் கட்சியை விட பா.ஜ. 10 மடங்கு அதிக பணத்தை செலவிட்டது. இருப்பினும் வெற்றி பெற முடியவில்லை.

**எதிர்க்கட்சிகள் ஒருங்கிணைய வேண்டும்!**

2024 மக்களவை தேர்தலில் எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைப்பு வேண்டும். அதை விட முக்கியமாக ஆளும் பா.ஜ.வை தோற்கடிக்க ஒரு மாற்று பார்வை தேவை . எதிர்க்கட்சிகளின் ஒற்றுமை விஷயத்தில், நாங்கள் அதை நோக்கிச் செயல்பட்டு வருகிறோம். அந்த பணி தற்போது வரை மிகவும் நன்றாக நடந்து வருகிறது. ஆனால் எனது கருத்துப்படி பாஜவை தோற்கடிக்க, எதிர்க்கட்சிகளின் ஒற்றுமை மட்டுமே போதுமானதாக இருக்காது. பா.ஜவுக்கு மாற்றாக ஒரு பார்வை வேண்டும் என்று நினைக்கிறேன். இந்திய ஒற்றுமை யாத்திரை அதன் முதல்படி. நாங்கள் அதை நோக்கி முன்னேறி வருகிறோம்.

பா.ஜ. மக்களை அச்சுறுத்துகிறது. அரசு நிறுவனங்களை தவறாக பயன்படுத்துகிறது. இந்திய ஒற்றுமை யாத்திரை தொடங்கிய போது மக்களுடன் தொடர்பு கொள்ள தேவையான அனைத்து கருவிகளும் பா.ஜ.ஆர்.எஸ்.எஸ். கட்டுப்பாட்டில் இருந்தது. இதனால் அரசியல் ரீதியாக செயல்படுவது ஏதோ ஒரு வகையில் கடினமாகிவிட்டது என்பதையும் நாங்கள் கண்டறிந்தோம். எனவே, ஊடகங்களில் நீங்கள் பார்ப்பது எல்லாம் உண்மை என்று நினைக்க வேண்டாம். இந்தியாவில் இன்று ஏழைகளும், சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த மக்களும் ஆதரவற்றவர்களாக உணர்கிறார்கள்.

**ஆணவப் போக்கில் பா.ஜ.க. செயல்பாடு!**

கோபம், வெறுப்பு, ஆணவம் ஆகியவற்றின் மீது நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தால், நீங்கள் பா.ஜ.க. கூட்டத்தில் அமர்ந்திருப்பீர்கள். இந்திய ஒற்றுமை நடைபயணத்தை நிறுத்த ஒன்றிய அரசு எவ்வளவோ முயன்றது. இந்த பயணத்தை தொடங்கிய ஐந்தாறு நாட்களுக்கு பிறகு ஆயிரக்கணக்கான கி.மீ. நடப்பது அவ்வளவு சுலபம் இல்லை என்பதை உணர்ந்தோம். ஆனால் ஆச்சர்யப்படும் வகையில் 3 வாரங்கள் கடந்த பின்னரும் தினமும் 25 கிமீ நடந்தும் நான் சோர்வடையவில்லை. என்னுடன் நடந்தவர்களிடம் கேட்ட போதும் அவர்களும் அதே போல் உணர்ந்தனர்.

அதன்பிறகுதான் புரிய ஆரம்பித்தது. நடப்பது நாங்கள் மட்டுமல்ல, எங்களுடன் நடப்பது ஒட்டுமொத்த இந்தியாவும் என்று.

**கடவுளுக்கே பாடம் எடுப்பார் மோடி!**

‘இந்தியாவில் ஒரு குழுவினர் உள்ளனர். அவர்கள் தங்களுக்கு எல்லாம் தெரியும் என்று உறுதியாக நம்புகிறார்கள். அவர்கள் கடவுளை விட அதிகமாகத் தெரியும் என்று நினைக்கிறார்கள். அவர்கள் கடவுளுடன் உட்கார்ந்து என்ன நடக்கிறது என்பதை அவருக்கு விளக்கலாம். நிச்சயமாக, நமது பிரதமர் அத்தகைய ஒரு உதாரணம்தான். நீங்கள் மோடியை கடவுளுடன் உட்கார வைத்தால், உலகம் எவ்வாறு இயங்குகிறது என்று கடவுளுக்கே பாடம் எடுப்பார். அவர் பேசுவதை கேட்டு நான் உருவாக்கிய உலகமா இது என்று கடவுள் குழப்பமடைவார்’.

’இந்தியா என்பது நமது அரசியல்சாசனத்தின்படி மாநிலங்களின் ஒன்றியம் தான் இந்தியா. நமது அரசியல்சாசனத்தின்படி ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள மொழி, வரலாறு, கலாச்சாரம் ஆகியவை ஒன்றிய அரசால் பாதுகாக்கப்பட வேண்டும். இதன் அடிப்படையில் அனைவரும் நமது அரசியல்சாசனத்தின் அடிப்படையில் ஒத்துழைத்து நடக்க வேண்டும். இதுதான் நடைமுறை. இதுவரை அப்படித்தான் நடந்தது. பா.ஜவும், ஆர்எஸ்எஸ்சும் இந்த கொள்கை மற்றும் அரசியல்சாசனத்தின் மீது தான் தாக்குதல் நடத்திவருகிறார்கள். இதுதான் உண்மை. என்னைப்பொறுத்தவரையில், நான் புரிந்து கொண்டதன் அடிப்படையில் தமிழ் மக்களுக்கு மற்ற மொழிகளை எல்லாம் விட தமிழ் மிகவும் உயர்வானது. இது வெறும் மொழி மட்டுமல்ல. அதற்கென தனி வரலாறு உள்ளது. அவர்களுக்கென தனி கலாச்சாரம் உள்ளது. அவர்களுக்கென தனி வாழ்வியல் முறை உள்ளது. எனவே தமிழ் மொழி அச்சுறுத்தப்படுவதை நான் ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன். ஸ்டேன்போர்டு பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற ராகுல் காந்தி உரையாற்றினார். அப்போது பேசிய அவர், இந்தியாவில் உள்ள விசாரணை அமைப்புகளைப் பயன்படுத்தி, எதிர்க்கட்சிகளை பா.ஜ.க. அச்சுறுத்தி வருவதாக குற்றம்சாட்டினார். இந்தியாவில், அவதூறு வழக்கில் மிகப் பெரிய தண்டனை வழங்கப்பட்டுள்ளது தனக்குதான் என்றும் அவர் கூறினார். எம்.பி.யாக இருந்தபோது செய்த மக்கள் பணியைவிட, தற்போது அதிகப்படியான நேரம் மக்கள் பணி செய்ய, தமக்கு மிகப்பெரிய வாய்ப்பு கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். எம்.பி., பதவி பறிக்கப்பட்ட விவகாரத்தில் தனது உரிமைக்காக தொடர்ந்து போராடுவேன் என்றும் ராகுல்காந்தி கூறினார்.

## சென்றார், வென்றார், வந்தார்!

# தொழில் அதிபர்களை சந்திப்பதற்கே பயண திட்டத்தை வகுத்த முதல்வர்!

### ‘தினத்தந்தி’ தலையங்கத்தில் பாராட்டு மழை!

சென்னை, ஜூன் 3 -

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வெளிநாட்டு பயணம் குறித்து ‘தினத்தந்தி’ நாளேடு 1.6.2023 தேதிய நாளேட்டில் முதல்வர் சென்றார், வென்றார், வந்தார் என பெருமை பொங்கும் வகையில் அவரது பயண திட்டங்கள் குறித்து தலையங்கம் எழுதியுள்ளது.

அது வருமாறு:-

முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் சிங்கப்பூர், ஜப்பான் நாடுகளுக்கு 9 நாட்கள் சுற்றுப்பயணமாக சென்றுவிட்டு நேற்றிரவு சென்னை திரும்பினார். இந்த இரு நாடுகளிலும் பார்க்க வேண்டிய இடங்கள் எவ்வளவோ இருக்கின்றன. ஆனால் அதையெல்லாம் பார்க்காமல், அங்குள்ள தொழில் அதிபர்களை சந்திப்பதற்கே தனது பயணத் திட்டத்தை வகுத்துக் கொண்டார்.

எந்தவொரு செய லுக்கும் ஒரு இலக்கு நிர்ணயி த்தால் தான் அதை அடைய எடுக்கப்படும் முயற்சிகளில் ஒரு வேகம் இருக்கும். அந்த வகையில் முதல்அமைச்சர்மு.க.ஸ்டாலின் பதவியேற்றவுடனேயே 2030ம் ஆண்டில் தமிழ்நாட்டு பொருளாதாரத்தை ரூ.75 லட்சம் கோடி யாக்குவதே தனது இலக்கு, குறிக்கோள், லட்சியம் என்று பிரகட னப்படுத்தினார். இந்தாண்டு தமிழ்நாட்டின்



தலையங்கம்
தினத்தந்தி
1.6.2023 (வியாழக்கிழமை)
சென்றார்; வென்றார்; வந்தார்!

பொருளாதாரம் ரூ.23.5 லட்சம் கோடியாக இருக்கும். இது 2030ம் ஆண்டுக்குள் ரூ.75 லட்சம் கோடியாக வேண்டுமென்றால், இன்னும் 3 மடங்கு வளர்ச்சியைக் காண வேண்டும். அதை அடைய தொழில் வளம், வேலைவாய்ப்புகள் பெருக வேண்டும், உற்பத்தி அதிகரிக்க வேண்டும்.

எனவே அவர், ஆட்சி பொறுப்பை ஏற்றவுடனேயே தொழில் வளர்ச்சி பெருக, புதிய தொழில் முதலீடுகளை ஈர்க்க திட்டமிட்டு பல முயற்சிகளை முனைப்புடன் எடுத்துக்கொண்டார். தமிழ்நாட்டு தொழில் அதிபர்கள், பிற மாநில தொழில் அதிபர்கள், வெளிநாட்டு நிறுவன தொழில் முதலீடுகள் என்று அவர் எடுத்துக் கொண்ட முயற்சியின் விளைவாக கடந்த இரு ஆண்டுகளில் ரூ.2 லட்சத்து 95 ஆயிரத்து 339 கோடி முதலீடுகளை ஈர்க்கும் வகையில் 226 திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. கடந்த மார்ச் மாதம் அவரது துபாய் பயணத்தின்போது ரூ.6 ஆயிரத்து 100 கோடி முதலீடுகளை ஈர்க்கும் 6 நிறுவனங்களோடு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதில் சில திட்டப்பணிகள் தொடங்கி விட்டன. வெளிநாட்டு பயணத்துக்கு முன்னதாக ஜப்பான், சிங்கப்பூர் நாடுகளில் உள்ள ‘மிட்சுபிஷி’ நிறுவனம் சார்பில் ரூ.1,891 கோடி முதலீட்டில் திருவள்ளூர் மாவட்டம் பெருவயல் கிராமத்தில் ஆலை அமைக்க முதல்அமைச்சர்மு.க.ஸ்டாலின் முன்னிலை யில் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இப்போது சிங்கப்பூர் சென்ற அடுத்த நாளே முன்னணி நிறுவனங்களின் தலைமை பொறுப்பில் உள்ளவர்களுடன் தனித்தனியாக சந்திப்பை மேற்கொண்ட அவர், அடுத்த ஆண்டு சென்னையில் நடக்கும் முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள அழைப்பு விடுத்தார். அங்குள்ள மந்திரிகளையும் சந்தித்தார்.

5 நிறுவனங்களுடன் தமிழ்நாட்டில் தொழில் தொடங்க ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. ஒரு நிறுவனம் ரூ.312 கோடி முதலீட்டுக்கு புரிந்து ணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. அடுத்து ஜப்பான் நாட்டில் ஒசாகா நகருக்கும், டோக்கியோ மாநகருக்கும் சென்று தொழில் அதிபர்களை தனித்தனியாகவும், கலந்துரையாடலாகவும் கொண்ட கூட்டங்களை நடத்தி சென்னையில் அடுத்த ஆண்டு நடக்கும் முதலீட்டாளர்கள் மாநாட்டுக்கு அழைப்பு விடுத்தார். ஒசாகாவில் இருந்து டோக்கியோவுக்கு ‘புல்லட்’ ரெயிலில் பயணம் செய்தார்.

ஜப்பானில் மட்டும் 7 நிறுவனங்க ளோடு ரூ.1,029 கோடியே 90 லட்சத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. குறிப்பாக ரத்தஅழுத்த மானிட்டர் போன்ற மருத்துவ உபகரணங்களை தயாரிக்கும் ஒம்ரான் நிறுவனம் இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டில்தான் தொழிற்சாலை அமைக்க இருக்கிறது. சிங்கப்பூர், ஜப்பான் சென்றார், வென்றார். “தொழில் வளர்ச்சிக்கு வித்திட்டு, முதலீட்டாளர்கள் மாநாட்டுக்கு அழைப்பு விடுத்து திரும்பி வந்தார்’’ என்ற பெருமைமிகு வாழ்த்துகளை முதல் அமைச்சருக்கு தமிழ்நாடு தெரிவிக்கிறது.

இவ்வாறு ‘தினத்தந்தி’ தலையங்கத்தில் முதல்வ ருக்கு பாராட்டு தெரிவித்துள்ளது.

# வரலாற்றை விடுதலை செய்தவர் வாழட்டும் தமிழின் வரலாறாக!

முத்தமிழ் அறிஞர் கலைஞருக்கு
நூற்றாண்டு விழா!
முதலமைச்சராக மு.க.ஸ்டாலின்!

பெரியார் நூற்றாண்டில் (1979)
எம்.ஜி.ஆர் முதலமைச்சர்!
பூவிருந்தவல்லி நெடுஞ்சாலைக்குப்
பெரியார் ஈ.வெ.ரா சாலை என்று
பெயர் மாற்றினார்.
என்ன நினைத்தார்களோ தெரிய
வில்லை
ஏப்ரல் 2021 இல்
Grand Western Trunk Road என்று
பெரியார் பெயரை மாற்றினார்கள்.
நினைவில் நிறுத்துங்கள்
மே மாதத் தேர்தலில் ஆட்சி மாறும்
என்றது
தளபதியின் குரல்!

ஆட்சிக்கு வரும் முன்பே
தளபதியின் ஆணையில்
பெரியார் நூற்றாண்டு அடையாள
நினைவு
நிலை பெற்றது!
அறிஞர் அண்ணாவின்
நூற்றாண்டில் (2009)
முதலமைச்சராக முத்தமிழ் அறிஞர்
கலைஞர்!
அண்ணா நூற்றாண்டு நூலகமாக
வரலாற்றில் அண்ணாவை
வாழ வைத்திருக்கிறார்!


இப்போது
கலைஞருக்கு நூற்றாண்டு
முதலமைச்சராக மு.க.ஸ்டாலின்!

சங்கம் வளர்த்த மதுரையில்
சங்கத் தமிழ் படைத்த
கலைஞர் நூற்றாண்டு நூலகம்!

திருவாரூர் தேரில்
திருவள்ளுவரை அமர வைத்து
வள்ளுவர் கோட்டம் எழுப்பியவருக்கு
அஞ்சுகம் அம்மையார் நினைவிட
ஊரில்
கலைஞர் கோட்டம்!

கலைஞர்!
தமிழ் மொழியின் புத்துயிர்ப்பு!
தமிழர்களின் புத்துணர்ச்சி!
பெரியார், அண்ணா கொள்கை
விழுதுகளில் கிளை விரித்து
தமிழர்களுக்கு வெளிச்சம் ஆனவர்!

வணிக நோக்கு இல்லாமல் இயக்கப்
போக்குக்குப்
பாதை போட்டுக் கொண்டே பயணம்
செய்தவர்!
தமிழர்கள் பயணிக்கத் தடம்
காட்டியவர்!
விழுமிய மரபுகளை நவீனம்
ஆக்கியவர்!
கடந்த காலத்தை வெறுமனே கழுவில்
ஏற்றாமல்
நிகழ் காலம் கொண்டு
மதிப்பீடுகளை மாற்றியமைத்தவர்!




நாடகம், திரைப்படம், தொலைக்காட்
சித் தொடர்
என்று கால மாற்றக் கலை வெளிப்பாட்
டுக்குக்
கை கொடுத்தவர்!
கணினி, இணையம், சமூக ஊடகத்
தொழில் நுட்பங்களோடு கை கோர்த்த
வர்!
1/2 வயதில் “செல்வ சந்திரா” புதினம்
எழுதியவர்!
14 வயதில் திருவாரூர் வீதிகளில்
தமிழ்க் கொடி ஏந்திப் போராடியவர்!
15 வயதில் “மாணவ நேசன்”
பத்திரிகை நடத்தியவர்!
18 வயதில் அண்ணாவின்
திராவிட நாட்டில் “இளமைப்பலி’
எழுதியவர்
18 வயதில் ‘முரசொலி’ மாத இதழ்
தொடங்கியவர்
20 வயதில்
“சாந்தா அல்லது பழனியப்பன்”
நாடகம் எழுதி நடித்தவர்
21 வயதில்
பெரியாரின் குடிஅரசில்
துணையாசிரியர் ஆனவர்!
25 வயதில் திரைத்தமிழைத் திருத்தத்
தொடங்கியவர்!
32 வயதில்

சாக்ரடீசுக்குக் கிரேக்கம் வழங்கிய
தீர்ப்பினைத் திருத்தி “கிரேக்கப்
பெரியார்
நாடகம் போட்டவர்!
92 வயதில் இராமானுஜர் பற்றிய
தொலைக்காட்சித் தொடர் தந்தவர்

“கலைஞர் எழுதுவதுதான் தமிழ்
நாங்கள் எழுதுவதெல்லாம்
தமிழே அல்ல” என்று
தாய்க் காவியம் வெளியீட்டு விழாவில்
ஞானபீட எழுத்தாளர் ஜெயகாந்தனால்
பாராட்டப்பட்டவர்!

“கலைஞரைப் போல் ஒருவர்
அத்தனைப் படைப்புகளையும்
எழுத முயன்றால் அதற்கு
ஒரு பிறவி போதாது” என்று
கலிபோர்னியா பல்கலைக்கழகப்
பேராசிரியர் ஜார்ஜ் ஹார்ட்டால்
புகழப்பட்டவர்!

“நூறு வருடம் கழித்துத்
தமிழ் வரலாற்றைப் படிக்கி
றவன்
இப்படி ஓர் ஆள்
நம்ம ஆள் இருந்தாரா! என்று
நினைக்கக் கூடிய அளவுக்குப்
பேராற்றல் பொருந்திய
பெருமகன் கலைஞர்” என்று
பேராசிரியர்
அ.ச.ஞானசம்பந்தனால்
போற்றப்பட்டவர்!

கலைஞர்!
அகத்தியரும் அடி பதித்த
தேவார மூவராலும் பாடப்பெற்ற
சேக்கிழார் பாடிய
பாரதப் பாண்டவர்கள் மட்டுமன்றிப்
பிரம்மனும் திருமாலும் நவக்கிரகங்க
ளும்
வழிபட்ட புராணக் கதைகள்
தளும்பும்
திருக்குவளையில் பிறந்தவர்!

சிறந்த வித்துவானும்
கவிதை புனையும் ஆற்றலும்
வடமொழியில் புலமையும்
புராணக் கதைசொல்லியுமான
பெரியவர் முத்துவேலரைத்
தந்தையாகப் பெற்றவர்!

இந்தியா முழுதும் திராவிட மாடலை
எதிர்பார்க்க வைக்கும்
முதல்வர் மு.க.ஸ்டாலினை
மகனாகப் பெற்றவர்!

தன்னைக் தானே செதுக்கிக்கொண்ட
சிற்பியும் சிலையும் ஆனவர்!

நீச மொழி என்று
ஒதுக்கிவைக்கப்பட்ட தமிழைச்
செம்மொழி என்று அறிவிக்கச் செய்து
தமிழ் மொழிக்கு விடுதலை தந்தவர்!

செங்கோல் கொண்டு வரலாற்றைத்
திருத்தாமல்
எழுதுகோல் கொண்டு தமிழ்
வரலாற்றை
விடுதலை செய்தவர்!
ஆம்!
வரலாறு விடுதலை செய்யும் என்று
காத்திராமல்
வரலாற்றை விடுதலை செய்தவர்
வாழட்டும் தமிழின் வரலாறாக!

**நன்றி : “கணையாழி” 3 ஜீன் 2023**



ம.ரா.

## புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா! எழுச்சியோடு கொண்டாடுவோம்!

### மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அறிக்கை!



புதுக்கோட்டை. ஜுன்3 -

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டுவிழாவை தமிழ்நாடு முதல்வர் கழகத்தலைவர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களோடு புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் முழுவதும் எழுச்சியோடு கொண்டாடுவோம் என புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அழைப்பு விடுத்து அறிக்கை வெளியிட்டுள்ளார் .

புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தமது அறிக்கையில் கூறி இருப்பதாவது ,

“உலகம் முழுவதிலும் தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ்வதற்கும், மூத்த மொழியாம் தமிழ்மொழி செம்மொழி தகுதியைப் பெற்று இன்று பட்டொளி வீசி பறப்பதற்கும் காரணமாயிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை தலைமைக்கழகத்தின் வழிகாட்டுதல்களோடு கலைஞர் நூற்றாண்டுவிழா ஜுன் 3ம் தேதி முதல் எழுச்சியோடு கொண்டாடப் படவிருக்கிறது

உலகத்தலைவர்களில் தாம் போட்டியிட்ட இடங்களிலெல்லாம் வெற்றி பெற்ற ஒரே தலைவராய் , தமிழ்நாட்டை செதுக்கிய சிற்பியாய் திகழும், ஒப்பாரும் மிக்காரும் இல்லா தலைவராம் கலைஞர் அவர்கள், தமது 14ம் வயதில், திருவாரூரில் தொடங்கிய பொதுவாழ்வு பயணத்தில், எத்தனையோ சாதனைகளை படைத்து உயர்ந்து இருந்திருக்கிறார்.

அப்படிப்பட்ட அந்த மகத்தான தலைவரின் நூறாவது பிறந்தநாளை கலைஞர் நூற்றாண்டு விழாவாக அறிவித்து தமிழ்நாடு முதல்வர் கழகத்தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், கலைஞர் அவர்களின் புகழ் கிரீடத்தில் மேலும் ஒரு வைரக் கல்லை பொருத்தி பெருமை சேர்த்திருக்கிறார். முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டுவிழாவை புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் முழுவதிலும் மாவட்ட, ஒன்றிய ,நகர, பேரூர், கிளை மற்றும் வார்டுகள், கழகங்கள் தோறும் கழக கொடி ஏற்றியும், பொதுமக்களுக்கு இனிப்புக்கள் வழங்கியும் சிறப்போடு கொண்டாடுவதோடு, ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் , மாணவ - மாணவிகளுக்கு கல்விகற்க உதவிகள் வழங்குதல், விளையாட்டுப் போட்டிகள், இலக்கிய போட்டிகளை நடத்துதல் போன்ற பல்வேறு நிகழ்வுகளை, இந்த வருடம் முழுவதும் நடத்தி கலைஞர் எனும் மாமனிதரின் புகழ் பாடுவோம்.

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பிறந்த நாள் விழா!

### மாநில இளைஞரணி துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ் அறிக்கை!

ஈரோடு, ஜுன் 3 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு இன்று (3.6.2023 - சனிக்கிழமை) காலை 7 மணியளவில் சோலார் வெண்டி பாளையம் பிரிவில் உள்ள தி.மு.க. இளைஞரணி கொடி கம்பத்தில் ஈரோடு தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சருமான சு.முத்து சாமி தலைமையில் கழக துணை பொதுசெயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான அந்தியூர் ப.செல்வராசு, மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம் முன்னிலையில் கழக கொடி ஏற்று விழா நடைபெற உள்ளது.

அதனை தொடர்ந்து காலை 8 மணியளவில் சென்னிமலை சாலை கே.கே.நகரில் அமைந்துள்ள ஆதரவற்ற முதியோர் என்.எல்.கருணை இல்லத்தில் காலை சிற்றுண்டி வழங்கப் பட உள்ளது. இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி, வார்டு கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், மற்றும் மாவட்டத்திற்குட்பட்ட இளைஞரணி மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி, வார்டு அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஈரோடு மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி, வார்டு கழக இளைஞரணி நிர்வாகிகள் அவர்களது பகுதியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாட வேண்டுகிறேன்.

இவ்வாறு மாநில இளைஞரணி துணை செயலாளர் கே.இ.பிரகாஷ் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.